# ‘நிபா’ எச்சரிக்கை தேவை!

கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்றிலிருந்து ஒருவழியாக மீண்டெழுந்துவிட்டோம் என்று நாம் நிம்மதிப் பெருமூச்சு விடும் வேளையில், நம்மை அச்சுறுத்தக் கிளம்பியிருக்கிறது ‘நிபா’ தீநுண்மி. அயல்வீடு பற்றி எரியும்போது நாம் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருக்க முடியாது. அண்டை மாநிலமான கேரளத்தில் இரண்டு உயிர்களை வங்கதேச வகை நிபா தீநுண்மி பலிகொண்டிருக்கிறது என்பதால், அதிவேக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம்.

2018–இல் முதல் முதலாக உயிர்கொல்லி நிபா தீநுண்மி கேரள மாநிலத்தில் தலைதூக்கியது. சுகாதாரத் துறையின் முன்களப் பணியாளர்கள் உள்பட 17 பேர் அப்போது பரவிய நிபா விஷக் காய்ச்சலில் உயிரிழந்தனர். 2019–இலும், 2021–இலும் மீண்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிபா விஷக் காய்ச்சலின் அறிகுறிகளும் பாதிப்புகளும் காணப்பட்டன என்றாலும், முன்னனுபவம் காரணமாக கேரள மாநிலத்தின் சுகாதாரத் துறை அதை உடனடியாக தடுத்து நிறுத்தி நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தது.

கேரளத்தில் நிபா பாதிப்பு 2019–இல் ஏற்பட்டது முதலே, தமிழகத்தின் சுகாதாரத் துறை அந்த மாநிலத்தையொட்டிய எல்லைப் பகுதிகளில் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருக்கிறது. இப்போதும்கூட ஆபத்தை வருமுன் காக்க, எல்லா நடவடிக்கைகளும் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சுகாதாரத் துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இந்த முறை கோழிக்கோடு அரசு மருத்துவமனையில் சாதாரண காய்ச்சல் அடையாளத்துடன் வந்த நோயாளியை ஆரம்பகட்ட பரிசோதனை செய்த மருத்துவர்கள், நிபா குறித்து சந்தேகப்படவில்லை. அதனால், 12 நாள்கள் கட்டுப்படுத்தப்படாமல் அந்த நோயாளியின் உடலில் நிபா தீநுண்மி அதிவேகமாக வளர்ந்துவிட்டது. அவரது உயிரையும் குடித்தது. அதே அடையாளத்துடன் இரண்டாவது நோயாளியும் உயிரிழந்தபோதுதான், மருத்துவர்கள் நிபா தீநுண்மி குறித்த ஐயப்பாட்டை எழுப்ப முற்பட்டனர்.

உடனடியாக மருத்துவமனை நிர்வாகமும், மருத்துவர்களும் செயல்படத் தொடங்கியது பாராட்டுக்குரியது. கேரள மாநில சுகாதாரத் துறையும் தாமதமில்லாமல் சிறப்பு நடவடிக்கை ஒழுங்கு முறைகள் ஏற்படுத்தி மாநிலம் முழுவதும் கண்காணிப்பை கடுமையாக்கியிருக்கிறது.

விலங்குகளிலிருந்து உருவாகும் நோய்களிலிருந்து மனித இனம் தன்னை காத்துக்கொள்வது இனிமேல் கடினம் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சர்வதேச அறிவியல் இதழான ‘நேச்சர்’, தனது 2021 அறிக்கையில் விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்த்தொற்று மையங்களில் (ஹாட் ஸ்பாட்) ஒன்றாக இந்தியாவின் மலைப்பிரதேசங்களை குறிப்பிட்டிருக்கிறது. அதில் கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு மூன்றுமே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

வனப்பகுதிகளும் மனிதர்கள் வாழும் பகுதிகளும் ஒன்றையொன்று நெருங்கும்போது, அதாவது மனிதர்கள் விலங்குகள் குடியிருக்கும் காடுகளை அழித்து குடியேறும்போது, விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்த்தொற்றுகளுக்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. 'நேச்சர்' இதழ் இதை குறிப்பிட்டுச் சொல்கிறது.

மனிதர்களின் குடியேற்றத்தாலும், ஆக்கிரமிப்பாலும் வனப் பகுதி குறையும்போது காடுகளில் வாழும் வனவிலங்குகளும், பறவை பூச்சிகளும் வேறுவழியில்லாமல் மனிதர்கள் வாழும் பகுதிகளில் நுழைய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. வனப்பரப்பு குறைவதனால் பழம் தின்னும் வௌவால் உள்ளிட்ட தீநுண்மிகளைப் பரப்பும் விலங்குகள், மனிதர்கள் வாழும் பகுதியில் அடைக்கலம் தேடுவது இயல்பு.

குரங்குக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், எலிக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் தொடங்கிய தீநுண்மி நோய்த்தொற்றுகள் எல்லாமே விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு பரவும் நோய்கள். காடுகள் அழிக்கப்படுவதால்தான் ஒன்றன் பின் ஒன்றாக இதுபோன்ற நோய்த்தொற்றுகள் மனிதர்களை தாக்குகின்றன. இவற்றுக்கு எதிராக தொடர்ந்து கண்காணிப்பும், அவற்றை எதிர்கொள்ளும் வழிமுறைகளும் மருத்துவத் துறையால் மேற்கொள்ளப்பட்டாலொழிய, அவற்றிலிருந்து நாம் தப்ப முடியாது.

எந்தவொரு காய்ச்சலையும் இனிமேல் நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. நோய்க்கான அறிகுறிகள் தோன்றினால், ஒரு நிமிடம்கூடத் தாமதிக்காமல் பரிசோதனைகளும், சிகிச்சைகளும் மேற்கொள்வதற்கான கட்டமைப்பு வசதி கிராமங்களில் இருந்து பெருநகரங்கள் வரை அனைவருக்கும் உடனடியாகக் கிடைக்க வழிவகை செய்தாக வேண்டும். யாராவது ஒருவருக்கு ஏற்படும் விலங்குகள் மூலம் பரவும் ஏதாவது ஒரு விஷக் காய்ச்சல், கவனிக்கப்படாமல் விடப்பட்டால் அது காற்றைவிட வேகமாக பல்லாயிரம் பேருக்கு பரவக்கூடும் என்கிற ஆபத்தை நாம் உணர வேண்டும்.

2018–இல் நிபா தீநுண்மிப் பரவலைத் தொடர்ந்து, தென்னிந்தியாவில் 'இன்ஸ்டிடியூட் ஆஃப் அட்வான்ஸ்ட் வைராலஜி' என்கிற மருத்துவப் பிரிவு அறிவிக்கப்பட்டது. இன்னும்கூட அது முழுமையான செயல்பாட்டுக்கு வரவில்லை. தீநுண்மி தொற்றுக்கான மாதிரிகள் புணேயிலுள்ள 'நேஷனல் வைராலஜி இன்ஸ்டிடியூட்'–இல் சோதனை செய்யப்பட்டு அறிக்கை பெறும் நிலையில்தான் நாம் இருக்கிறோம். திருவனந்தபுரத்தில் மட்டுமல்லாமல், இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் 'இன்ஸ்டிடியூட் ஆஃப் அட்வான்ஸ்ட் வைராலஜி' அமைக்கப்பட வேண்டும்.

கேரள மாநிலத்தில் உறுதி செய்யப்பட்டிருக்கும் நிபா தீநுண்மி தொற்று குறித்து அச்சம் தேவையில்லை என்றாலும், எச்சரிக்கை மனநிலை அவசியம். கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்றின் போது நாம் மேற்கொண்ட முகக்கவசம், கைகளை அடிக்கடி கழுவுதல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை வழக்கமாகவே மாற்றிக்கொள்வது நல்லது.

EVA STALIN IAS ACADEMY

# ‘ஏர்பஸ்’ நிறுவனத்தின் முதல் சி295 விமானம் இந்திய விமானப் படையிடம் ஒப்படைப்பு

செவில் (ஸ்பெயின்), செப்.13: ஸ்பெயினில் உள்ள ஏர்பஸ் விமான தயாரிப்பு நிறுவனம் இந்திய விமானப் படைக்கு சி295 போக்குவரத்து விமானங்கள் விநியோகத்தை புதன்கிழமை தொடங்கியது.

ஸ்பெயினின் செவில் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விமானப்படைத் தளபதி வி.ஆர்.சௌதரியிடம் முதல் சி295 விமானம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது.

இந்தியாவிடம் தற்போதுள்ள கனரக போக்குவரத்து விமானங்கள் செல்ல முடியாத இடங்களுக்குக்கூட 50 முதல் 71 வீரர்களையும் ஏராளமான தளவாடங்களையும் எடுத்துச் செல்லும் திறன் கொண்டது சி295 விமானம். போரிடர் மீட்பு, கடல்சார் கண்காணிப்பு பணிகளிலும் இந்த விமானத்தைப் பயன்படுத்த முடியும்.

ஏர்பஸ் நிறுவனத்திடமிருந்து ரூ.21,935 கோடியில் 56 சி295 விமானங்களை கொள்முதல் செய்ய இந்தியா கடந்த ஆண்டு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதில் முதல் 16 விமானங்களை செவில் நகரில் அமைந்துள்ள ஏர்பஸ் நிறுவன தயாரிப்பு மையத்தில் தயாரித்து ஒப்படைக்கும். எஞ்சிய 40 விமானங்கள் இந்தியாவில் டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் (டிஏஎஸ்எல்) நிறுவனத்தில் தயாரித்து வழங்கும். இதற்காக குஜராத் மாநிலம் வதோதராவில் அமையவுள்ள டாடா நிறுவன உற்பத்தி மையத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு அக்டோபரில் அடிக்கல் நாட்டினார். இந்த உற்பத்தி மையம் அடுத்த ஆண்டு நவம்பரில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, முதல் சி295 விமானத்தை இந்திய விமானப் படையிடம் ஏர்பஸ் நிறுவனம் ஒப்படைத்துள்ளது.



இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்ட முதல் சி295 விமானத்தில் புதன்கிழமை பயிற்சிப் பயணம் மேற்கொண்ட பிறகு செய்தியாளர்களிடம் பேசிய விமானப் படை தலைமைத் தளபதி வி.ஆர்.சௌதரி.

முன்னதாக, இந்த விமானத்தை இயக்க மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கென இந்திய விமானப் படையைச் சேர்ந்த 6 விமானிகள் மற்றும் 20 தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு செவில் விமான தயாரிப்பு மையத்தில் விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது சி295 விமானம் அடுத்த ஆண்டு மே மாதம் இந்திய விமானப் படையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

EVA STALIN

# கேரளத்தில் பரவும் வங்கதேச வகை 'நிபா' தீநுண்மி

## சுகாதார அமைச்சர் தகவல்

**திருவனந்தபுரம், செப். 13:** கேரளத்தில் பரவும் நிபா தீநுண்மியானது (வைரஸ்) அதிக இறப்பு விகிதத்தைக் கொண்ட வங்கதேச வகையைச் சார்ந்தது என அந்த மாநில சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் தெரிவித்தார்.

கேரளத்தின் கோழிக்கோடு மாவட்டத்தில் காய்ச்சலைத் தொடர்ந்து 2 பேர் கடந்த திங்கள்கிழமை உயிரிழந்தனர். இதையடுத்து, அவர்களுடன் தொடர்புலிருந்த உறவினர்கள் 4 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களின் ரத்த மாதிரிகள், நிபா தொற்று பரிசோதனைக்காக புணேவில் அமைந்துள்ள தேசிய தீநுண்மியியல் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பரிசோதனையின் முடிவில், உயிரிழந்த 2 பேருக்கும் நிபா தீநுண்மி தொற்று பாதிக்கப்பட்டிருந்தது உறுதிப்படுத்தப்பட்டதாக மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். உயிரிழந்தவர் ஒருவரின் 9 வயது மகன் மற்றும் உறவினர் என 2 பேருக்கும் தொற்று பாதிப்பு உறுதிப்பட்டது.

இதைத் தொடர்ந்து, மாவட்டம் முழுவதும் சுகாதார எச்சரிக்கை விடுக்கப்பட்டது. கோழிக்கோடு நகரில் கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன.

கேரள சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில், நிபா தொற்று பாதிப்பு தொடர்பாக பேரவையில் கேள்விகள் எழுப்பப்பட்டன.

அதற்கு பதிலளித்துப் பேசிய மாநில சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ், 'மாநிலத்தில் பரவும் நிபா தீநுண்மியானது (வைரஸ்) அதிக இறப்பு விகிதத்தைக் கொண்ட வங்கதேச வகையைச் சார்ந்தது. ஆனால், தொற்று பாதிப்பு குறைவாகவே உள்ளது.

தேசிய தீநுண்மியியல் கழகத்தின் (என்ஐவி) தொற்றுநோயியல் நிபுணர்கள் சென்னையிலிருந்து கேரளாவுக்கு வந்து தொற்று பாதிப்பு தொடர்பாக ஆய்வு மேற்கொள்வர். நிபா தொற்று பாதித்த நோயாளிகளுக்குத் தேவைப்படும் தடுப்பு மருந்தை வழங்க தேசிய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் ஒப்புக்கொண்டுள்ளது.

கோழிக்கோடு மருத்துவக் கல்லூரியில் தற்காலிக ஆய்வகம் அமைத்து நிபா தொற்றைப் பரிசோதிக்கவும் மாநிலத்தில் வெளவால்கள் குறித்து கணக்கெடுத்து ஆய்வு நடத்தவும் புணே என்ஐவி குழு வருகின்றனர்.

கண்காணிப்பு, மாதிரி பரிசோதனை, ஆராய்ச்சி மேலாண்மை, தொடர்பு கண்டறிதல், நோயாளிகளின் போக்குவரத்து மேலாண்மை மற்றும் பிற பணிகளுக்காக 16 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொற்று பரவலைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது' என்றார்.

தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டுள்ள கோழிக்கோடு மாவட்டத்தின் ஆத்தஞ்சேரி, மருதோங்கரா, திருவள்ளூர், குட்டியாடி, காயக்கொடி, வில்லியப்பள்ளி, கவிலும்பாறை ஆகிய 7 கிராமங்கள் நோய் கட்டுப்பாட்டுப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.



கோழிக்கோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள நிபா தனிமை வார்டு.

## நிதி நெருக்கடி குறித்து கேரள பேரவையில் விவாதம்

**திருவனந்தபுரம், செப். 13:** கேரள மாநிலம் எதிர்கொள்ளும் நிதி நெருக்கடி குறித்து சட்டப்பேரவையில் புதன்கிழமை விவாதம் நடைபெற்றது.

இது தொடர்பாக எதிர்க்கட்சியான காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக கூட்டணி கொண்டு வந்த ஒத்திவைப்பு தீர்மானத்தை அரசு ஏற்றுக்கொண்டது.

நிதிப் பிரச்னையால் மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்கள் தடைபடுவதாக அந்தத் தீர்மானத்தில் குற்றஞ்சாட்டப்பட்டது. நிதி நிலைமை குறித்து விவாதங்களை நடத்த எதிர்க்கட்சிகள் விரும்புவது மகிழ்ச்சி அளிப்பதாக மாநில நிதியமைச்சர் கே.என்.பாலகோபால் தெரிவித்தார்.

இதையடுத்து, நிதி நெருக்கடி குறித்து பிற்பகல் 1 மணிக்குத் தொடங்கி 2 மணி நேரம் வரை பேரவையில் விவாதம் நடைபெறும் என்று பேரவைத் தலைவர் ஏ.என்.ஷம்சீர் அறிவித்தார்.

விவாதத்தின்போது மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளால் கேரளா நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளதாக நிதியமைச்சர் பாலகோபால் கூறினார்.

# 40% எம்.பி.க்கள் மீது குற்றவியல் வழக்குகள்

**புது தில்லி, செப். 13:** நாடாளுமன்றத்தின் 40 சதவீத எம்.பி.க்கள் மீது குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தன்னார்வ அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் எம்.பி.க்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ள குற்றவியல் வழக்குகள், அவர்களின் சொத்து மதிப்பு உள்ளிட்டவை குறித்து 'அசோசியேஷன் ஃபார் டெமாக்ரேடிக் ரிஃபார்ம்ஸ்' என்ற தன்னார்வ அமைப்பு ஆய்வு மேற்கொண்டது. மக்களவை, மாநிலங்களவை தேர்தல்களில் போட்டியிடுவதற்கு முன் அவர்கள் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தின் அடிப்படையில் அந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**அண்மையில் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய விவரங்கள்:**

விவரங்கள் ஆய்வு செய்யப்பட்ட மொத்த எம்.பி.க்கள்
**763**

குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்ட எம்.பி.க்கள்
**306** (40 சதவீதம்)

தீவிர குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்ட எம்.பி.க்கள்
**194** (25 சதவீதம்)

கோடீஸ்வர எம்.பி.க்கள்
**53** (7 சதவீதம்)



## தன்னார்வ அமைப்பு அறிக்கையில் தகவல்

எம்.பி.க்களின் சராசரி சொத்து மதிப்பு
**ரூ.38.33 கோடி**

குற்ற வழக்கு பதியப்பட்டுள்ள எம்.பி.க்களின் சராசரி சொத்து
**ரூ.50.03 கோடி**

குற்ற வழக்கு பதியப்படாத எம்.பி.க்களின் சராசரி சொத்து
**ரூ.30.50 கோடி**

கட்சி வாரியாக எம்.பி.க்களின் குற்ற வழக்குகள்

| கட்சி | குற்ற வழக்குகள் உள்ள எம்.பி.க்கள் | கட்சி எம்.பி.க்களில் குற்ற வழக்குள்ளோர் சதவீதம் |
|---|---|---|
| பாஜக | 139 | 36% |
| காங்கிரஸ் | 43 | 53% |
| திரிணமூல் | 14 | 39% |
| திமுக | 13 | 38% |
| ஐக்கிய ஜனதா தளம் | 13 | 62% |
| ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் | 13 | 42% |
| சிவசேனை (உத்தவ் தாக்கரே) | 7 | 78% |
| மார்க்சிஸ்ட் | 6 | 75% |
| தெலங்கானா ராஷ்டிர சமிதி | 6 | 38% |
| அதிமுக | 1 | 20% |

## எம்.பி.க்களின் சொத்து விவரங்கள்

| சொத்து மதிப்பு | எம்.பி.க்களின் எண்ணிக்கை | சொத்து மதிப்பு | எம்.பி.க்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ரூ.1,000 கோடிக்கு மேல் | 3 | ரூ.10 கோடி முதல் ரூ.100 கோடி வரை | 215 |
| ரூ.500 கோடி முதல் ரூ.1,000 கோடி வரை | 3 | ரூ.1 கோடி முதல் ரூ.10 கோடி வரை | 400 |
| ரூ.100 கோடி முதல் ரூ.500 கோடி வரை | 47 | ரூ.10 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை | 82 |
| | | ரூ.10 லட்சத்துக்கும் குறைவு | 13 |

அதிக சொத்து மதிப்புள்ள எம்.பி.க்களைக் கொண்ட கட்சிகள்

| கட்சி | எம்.பி.க்கள் எண்ணிக்கை | எம்.பி.க்களின் மொத்த சொத்து |
|---|---|---|
| பாஜக | 385 | ரூ.7,051 கோடி |
| தெலங்கானா ராஷ்டிர சமிதி | 16 | ரூ.6,136 கோடி |
| ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் | 31 | ரூ.4,766 கோடி |
| காங்கிரஸ் | 81 | ரூ.3,169 கோடி |
| ஆம் ஆத்மி | 11 | ரூ.1,318 கோடி |
| சமாஜவாதி | 6 | ரூ.1,066 கோடி |
| திமுக | 34 | ரூ.686 கோடி |
| சிரோமணி அகாலி தளம் | 2 | ரூ.435 கோடி |
| ராஷ்ட்ரீய ஜனதா தளம் | 6 | ரூ.426 கோடி |

அதிக சொத்து மதிப்புள்ள எம்.பி.க்களைக் கொண்ட மாநிலங்கள்

| மாநிலங்கள் | எம்.பி.க்கள் எண்ணிக்கை | எம்.பி.க்களின் மொத்த சொத்து |
|---|---|---|
| தெலங்கானா | 24 | ரூ.6,294 கோடி |
| ஆந்திரம் | 36 | ரூ.5,427 கோடி |
| உத்தர பிரதேசம் | 108 | ரூ.3,340 கோடி |
| மகாராஷ்டிரம் | 65 | ரூ.1,981 கோடி |
| பஞ்சாப் | 20 | ரூ.1,778 கோடி |
| கர்நாடகம் | 39 | ரூ.1,339 கோடி |
| மத்திய பிரதேசம் | 40 | ரூ.1,311 கோடி |
| தமிழகம் | 57 | ரூ.1,203 கோடி |
| குஜராத் | 37 | ரூ.1,178 கோடி |
| மேற்கு வங்கம் | 58 | ரூ.1,050 கோடி |

அணை உடைப்பு

# 'லிபியாவில் 20,000 பேர் உயிரிழந்திருக்கலாம்!'

**டெர்னா, செப். 13:** லிபியாவில் அணை உடைந்து வீடுகள் அடித்துச் செல்லப்பட்டு, கடலில் இருந்து தொடர்ந்து சடலங்கள் கரையொதுங்கி வரும் நிலையில், 20,000 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுவரை மீட்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை 5,100-ஐ கடந்துள்ளதாக புதன்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கிழக்குப் பிராந்திய அரசின் பொது விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அபு கிவூத் கூறியதாவது:

வாடி டெர்னா நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை உடைந்து, அதிலிருந்த வெள்ள நீர் டெர்னா நகரையும், அதன் சுற்றியுள்ள பகுதிகளையும் மத்தியதரைக் கடலுக்குள் அடித்துச் சென்றது.

ஏற்கெனவே பாதிப்புப் பகுதியிலிருந்து 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்ட நிலையில், அந்தக் கடலில் இருந்து தொடர்ந்து சடலங்கள் கரையொதுங்கி வருகின்றன என்றார் அவர்.

ஏற்கெனவே, அணை உடைப்புக்குப் பிறகு 10,000 பேர் மாயமானதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த எண்ணிக்கை தற்போது 20 ஆயிரமாக அதிகரித்துள்ளதாகவும், மாயமான அனைவரும் உயிரிழந்திருக்கலாம் எனவும் அல்-டப்தா மருத்துவ மையத்தின் இயக்குநர் அப்துல் ரஹீம் மாஸிக் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, பாதிக்கப்பட்ட பகுதிகள் பலவற்றில் சாலை இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் அந்தப் பகுதிக்கு மீட்புக் குழுவினரால் செல்ல முடியவில்லை; இதன் காரணமாக பாதிப்பு விவரங்கள் பற்றி முழுமையாகத் தெரியவில்லை என அதிகாரிகள் கூறினர்.

மத்தியதரைக் கடலையொட்டி அமைந்துள்ள வட ஆப்பிரிக்க நாடான லிபியாவின் கிழக்குப் பகுதியை அந்தக் கடலில் உருவான சக்திவாய்ந்த 'டேனியல்' புயல் ஞாயிற்றுக்கிழமை இரவு மிகக் கடுமையாகத் தாக்கியது.

இதனால் பெய்த கனமழையில், அந்தப் பகுதியில் மலையிலிருந்து பாயும் வாடி டெர்னா நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை மிகப் பெரிய சப்தத்துடன் வெடித்து உடைந்தது.

அதையடுத்து, அந்த அணையிலிருந்த வெள்ள நீர் டெர்னா நகரம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்குள் பாய்ந்த அங்கிருந்த வீடுகளை உடைத்து அவற்றின் இடிபாடுகளையும், வாகனங்கள் உள்ளிட்ட பிற பொருள்களையும் அருகிலுள்ள கடலுக்குள் அடித்துச் சென்றது.

வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்த சுமார் 5,100 பேரது சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

இந்த பேரிடருக்குப் பிறகு டெர்னா நகர மக்கள் 2 நாள்களாக அரசின் உதவியின்றி தனித்து விடப்பட்டனர். இந்தச் சூழலில், வெள்ள பாதிப்புப் பகுதிகளுக்கு கிழக்குப் பிராந்திய அரசின் அதிகாரிகள் மற்றும் மீட்புக் குழுவினர் செவ்வாய்க்கிழமைதான் வந்தடைந்தனர்.

உள்ளூர் மீட்புக் குழுவினருடன் கிழக்குப் பிராந்திய அரசுப் படைகள், அரசுப் பணியாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து, கட்டட இடிபாடுகளில் இருந்து சடலங்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

லிபியாவில் சர்வாதிகார ஆட்சி செலுத்தி வந்த கடாஃபியின் ஆட்சியை நேட்டோவின் ஆதரவுடன் கிளர்ச்சியாளர்கள் கடந்த 2011-ஆம் ஆண்டு கவிழ்த்தனர்.

அதன் பிறகு பல்வேறு ஆயுதக் குழுக்கள் மோதிக் கொண்ட அந்த நாட்டின் மேற்குப் பகுதியில் திரிபாலியைத் தலைநகராகக் கொண்ட ஓர் அரசும், அதற்குப் போட்டியாக கிழக்கே மற்றோர் அரசும் நடைபெற்று வருகின்றன.

அங்கு 10 ஆண்டுகளுக்கும் மேல் நடைபெற்று வரும் மோதல்கள் மற்றும் குழப்பம் காரணமாக, நாட்டின் உள்கட்டமைப்பை பராமரிக்க முடியாமல் போனதால்தான் வாடி டெர்னா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை தற்போது உடைந்து ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.



அணை வெள்ளத்தால் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்ட டெர்னா நகரின் ஒரு பகுதி.

EVA STALIN IAS ACADEMY